## தமிழ்நாடு அரசு
## வேளாண்மைப் பொறியியல் துறை

# விவசாயிகளுக்கு மின்கட்டமைப்பு சாராத, தனித்தியங்கும் சூரிய சக்தி பம்பு செட்டுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டம்

வேளாண்மையில் நீர்ப் பாசனத்திற்கு தேவையான எரிசக்தியினை உறுதி செய்யும் நோக்கத்துடன் 2013–14 ஆம் ஆண்டு முதல் சூரிய சக்தியால் இயங்கும் மோட்டார் பம்பு செட்டுகளை தமிழக அரசு விவசாயிகளுக்கு மானியத்தில் அமைத்துக் கொடுத்து வருகிறது.

சூரிய சக்தி பம்புசெட்டுகள் மூலம் மின் இணைப்பு தேவையின்றி பகலில் சுமார் 8 மணிநேரம் பாசனத்திற்கு தடையில்லா மின்சாரம் பெற முடியும்.



மத்திய அரசு, பிரதம மந்திரியின் விவசாயிகளுக்கான எரிசக்தி பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தின் (PM-KUSUM) கீழ் தமிழகத்திற்கு 17,500 மின்கட்டமைப்பு சாராத, தனித்தியங்கும் சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்திட ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம் தற்பொழுது 2020–21 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## மானியம் விபரம்

இத்திட்டம் மத்திய அரசின் 30 சதவீத மானியத்துடனும் தமிழக அரசின் 40 சதவீத மானியத்துடனும் ஆக மொத்தம் 70 சதவீத மானியத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. மீதமுள்ள 30 சதவீதம் விவசாயிகளின் பங்களிப்பாகும்.

## விலை விபரம்

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள பல்வேறு வகையான சூரிய சக்தி பம்பு செட்டுகளுக்கான விலை நிர்ணயம் செய்தல் மற்றும் நிறுவனங்களை அங்கீகரித்தல் ஆகியவை மத்திய அரசால் கீழ்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

### மின்கட்டமைப்பு சாராத, தனித்தியங்கும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளுக்கான விலை மற்றும் நிறுவனங்கள் விபரம்

**(மொத்த விலை என்பது நிறுவுதல் செலவு, வரிகள், 5 ஆண்டுகால பராமரிப்பு மற்றும் காப்பீடு செலவுகளை உள்ளடக்கியது)**

| வரிசை எண் | சூரிய சக்தி பம்புசெட்டு அமைப்பிற் கான வகை | மொத்த விலை (ரூ) | 30 % விவசா யிகளின் பங்களிப்பு (ரூ) | 70 % மானியம் (ரூ) | சூரிய சக்தி பம்புசெட்டுகளை அமைக்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| அ. நீர்மூழ்கி மோட்டர் பம்பு செட்டு அமைப்புகள் (DC - Submersible pumps - Water Filled Motor) | | | | | |
| 1 | 5 HP DC ( 230 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 2,42,303 | 72,691 | 1,69,612 | 1) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>2) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத். |
| 2 | 7.5 HP DC ( 320 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 3,49,569 | 1,04,871 | 2,44,698 | 1) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>2) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3) ஸ்ரீ சாவிட்டிர் சோலார் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத். |
| 3 | 10 HP DC ( 490 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 4,39,629 | 1,31,889 | 3,07,741 | 1) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>2) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>4) சாய் பாபுஜி ப்ரொஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>5) சக்தி பம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், மத்தியப்பிரேதேசம்.<br>6.) டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் லிமிடெட், உத்தரப்பிரதேசம். |

## மின்கட்டமைப்பு சாராத, தனித்தியங்கும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளுக்கான விலை மற்றும் நிறுவனங்கள் விபரம்

| வரிசை எண் | சூரிய சக்தி பம்புசெட்டு அமைப்பிற்கான வகை | மொத்த விலை (ரூ) | 30 % விவசாயிகளின் பங்களிப்பு (ரூ) | 70 % மானியம் (ரூ) | சூரிய சக்தி பம்புசெட்டுகளை அமைக்க அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் |
|---|---|---|---|---|---|
| ஆ. நீர்மூழ்கி மோட்டர் பம்பு செட்டு அமைப்புகள் (AC Submersible pumps - Water Filled Motor) | | | | | |
| 4 | 5 HP AC ( 230 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 2,37,947 | 71,384 | 1,66,563 | 1) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>2) ஸ்ரீ சாவிட்டிர் சோலார் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத். |
| 5 | 7.5 HP AC ( 320 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 3,16,899 | 95,070 | 2,21,829 | 1) ஸ்ரீ சாவிட்டிர் சோலார் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத். |
| 6 | 10 HP AC ( 490 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 4,37,669 | 1,31,301 | 3,06,368 | 1) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>2) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>4) சாய் பாபுஜி ப்ரொஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>5) சக்தி பம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், மத்தியப்பிரேதேசம்.<br>6.) டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் லிமிடெட், உத்தரப்பிரதேசம். |
| இ. நீர்மூழ்கி மோட்டர் பம்பு செட்டு அமைப்புகள் (AC/DC Submersible pumps - Oil Filled Motor) | | | | | |
| 1 | 10 HP DC ( 490 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 4,59,000 | 1,51,260 | 3,07,741 | 1.) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>2) சாய் பாபுஜி ப்ரொஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட், சென்னை.<br>4) சி.ஆர்.ஐ. பம்ப்ஸ், பிரைவேட் லிமிடெட், கோவை. |
| 2 | 10 HP AC ( 490 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 4,54,967 | 1,48,598 | 3,06,368 | 1.) 1.) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>2) சாய் பாபுஜி ப்ரொஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட், சென்னை.<br>4) சி.ஆர்.ஐ. பம்ப்ஸ், பிரைவேட் லிமிடெட், கோவை. |

குறிப்பு : 10 HP ஆயில் நிரப்பப்பட்ட நீர் மூழ்கி மோட்டாரின் மானிய தொகையானது அதற்கு இணையான 10 HP நீர் நிரப்பப்பட்ட நீர் மூழ்கி மோட்டாரின் மானிய தொகைக்கு நேர்செய்யப்பட்டுள்ளது. எனவே 10 HP ஆயில் நிரப்பப்பட்ட நீர் மூழ்கி மோட்டாரின் பயனாளர் பங்களிப்பு தொகை 30%ஐ விட அதிகமாகும்.

| ஈ. தரைமட்டத்தில் அமைக்கும் பம்பு செட்டு அமைப்புகள் (Surface Pumps) | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 5 HP DC ( 100 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 2,40,122 | 72,037 | 1,68,085 | 1) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத் . |
| 2 | 7.5 HP DC ( 100 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 3,67,525 | 1,10,258 | 2,57,267 | 1) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>2) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>4) ஸ்வெலக்ட் எனர்ஜி சிஸ்டம்ஸ் லிமிடெட், சென்னை. |
| 3 | 10 HP DC ( 145 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 4,34,729 | 1,30,419 | 3,04,310 | 1) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>2) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>4) சாய் பாபுஜி ப்ரொஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>5) சக்தி பம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், மத்தியப்பிரேதேசம்.<br>6.) டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் லிமிடெட், உத்தரப்பிரதேசம். |
| 4 | 5 HP AC ( 100 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 2,33,664 | 70,099 | 1,63,565 | 1) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>2) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத். |
| 5 | 7.5 HP AC ( 100 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 3,47,077 | 1,04,123 | 2,42,954 | 1) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>2) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத். |
| 6 | 10 HP AC ( 145 அடி வரை நீர் இறைக்கக் கூடியது ) | 4,34,729 | 1,30,419 | 3,04,310 | 1) ஜீன்னா சோலார் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>2) சன்கிரேஸ் எனர்ஜி சொல்யூசன் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>3.) சோலெக்ஸ் எனர்ஜி லிமிடெட், குஜராத்.<br>4) சாய் பாபுஜி ப்ரொஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், ஹைதராபாத்.<br>5) சக்தி பம்ப்ஸ் (இந்தியா) லிமிடெட், மத்தியப்பிரேதேசம்.<br>6.) டாடா பவர் சோலார் சிஸ்டம்ஸ் லிமிடெட், உத்தரப்பிரதேசம்.<br>7) சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் பிரைவேட் லிமிடெட், கோவை. |

1) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலம் (TANGEDCO) இலவச மின் இணைப்புக்கோரி ஏற்கெனவே விண்ணப்பித்துள்ள விவசாயிகள் அவர்களுடைய மூதுரிமையை துறக்க வேண்டிய அவசியமில்லை. தங்களுக்குரிய இலவச மின் இணைப்பு முறை (normal priority) வரும்பொழுது சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான சம்மதக் கடிதத்தை சம்பந்தப்பட்ட உதவிசெயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தில் வழங்க வேண்டும்.

2) இதுவரை இலவச மின் இணைப்புக் கோரி விண்ணப்பிக்காத விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் சூரியசக்தி பம்பு செட்டுகளை அமைத்திட, இலவச மின் இணைப்புக்கோரி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை.

3) இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் சூரியசக்தியால் இயங்கும் பம்புசெட்டுகளை மின் கட்டமைப்புடன் வரும் காலங்களில் இணைத்திட விரும்பும் விவசாயிகள், இலவச மின் இணைப்புக்கோரி தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

4) இத்திட்டத்தின் கீழ் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைத்திட விண்ணப்பம் அளிக்கும் பொழுது, சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை நுண்ணீர் பாசனத்துடன் இணைத்திட உறுதிமொழி அளித்திட வேண்டும்.

5) வேளாண் பணிகளுக்கு ஆற்றுப்படுகை மற்றும் நீர் நிலைகளில் இருந்து 200 மீட்டருக்குள், காரை இடப்படாத கால்வாய்களிலிருந்து 50 மீட்டருக்குள், நிலத்தடி நீரை இறைப்பதற்கு அனுமதி கிடையாது. மேற்கண்ட தொலைவிற்குள் நிலத்தடி நீரை இறைக்க வேண்டுமானால் பொதுப்பணித்துறையிடமிருந்து தடையில்லாச் சான்று பெற வேண்டும். மேற்படி வரம்பிற்குள் உள்ள நீர் ஆதாரங்களுக்கு சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளை அமைத்திட விண்ணப்பிக்கும் பொழுது பொதுப்பணித்துறையின் தடையில்லா சான்றினை இணைத்திட வேண்டும்.

## அணுக வேண்டிய அலுவலகம்

இத்திட்டத்தின் மூலம் பயன் பெற ஆர்வமுடைய விவசாயிகள் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டத்தில் உள்ள உதவிசெயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை (அல்லது) மாவட்ட செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகங்களில் தொடர்பு கொண்டு விண்ணப்பித்து பயன் பெறும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## தொடர்புக்கு

| | |
|---|---|
| **தலைமைப் பொறியாளர்(வேபொ),<br>வேளாண்மைப் பொறியியல் துறை,<br>எண்.487, அண்ணாசலை,<br>நந்தனம், சென்னை – 600 035.<br><br>தொலைபேசி எண் – 044 29515 322,<br>044 29510 822,<br>044 29510 922<br>இமெயில்–aedcewrm@gmail.com** | **சம்பந்தப்பட்ட செயற்பொறியாளர்(வேபொ)<br>மற்றும்<br>உதவி செயற்பொறியாளர்(வேபொ)** |